திரு. ம. கமல்நாதன் : கிராம அதிகாரிகள் கிராம பஞ்சாயத்துடன் அதிக தொடர்பு கொண்டிருக்கிறார்கள். ஆணையாளர்கள் அவர்களை அழைப்பதற்கு என்றால் கூட, அதிகாரம் அற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களை பஞ்சாயத்து யூனியன் கட்டுப்பாட்டுக்கும், ஆணையாளரின் அதிகாரத்திற்கும் உட்படுத்த அரசினர் தனியாக உத்தரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது நான் தெரிந்துகொண்ட வரையில் அந்த ஒத்துழைப்பு சரியாகத்தான் இருக்கிறது என்பதுதான் எனக்கு வந்திருக்கக்கூடிய தகவல். இதில் ஏதேனும் கஷ்டங்கள் இருந்தால் கனம் அங்கத்தினர் மான்யத்தை விவாதிக்கும்போது விரிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் : மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளைகள் இம் முறையிலே நியமிக்கப்படுகிறார்களே, அதை ஏதாவது நீக்குவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியாது.

சிறுவர்களுக்கான பொருட்காட்சி

* 373 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை எழும்பூரில் உள்ள அரும் பொருட்காட்சி சாலையில் **(Museum)** சிறுவர்களுக்கென தனியாக ஒரு பொருட்காட்சி நிலையம் நிறுவும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சர்க்கார் அரும் பொருட்காட்சிசாலையில் குழந்தைகள் பிரிவு ஒன்று தனியாக தற்பொழுது இருக்கின்றது. குழந்தைகள் அரும்பொருட்காட்சிசாலைக்காகத் தனியாக கட்டடம் கட்டுவதைப் பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

There is a separate Children's section in the Government Museum, now. The question of construction of a separate building for the Children's Museum is under the consideration of Government.

திரு. இராம. அரங்கண்ணல் : 1956-ல் கவர்னராக இருந்த பிரகாசா அவர்கள் குழந்தைகள் மியூஸியத்திற்கு கல்நாட்டு விழா செய்தார்கள். இப்பொழுது 1963-ல் அந்தக் கல் இருக்கிறதே ஒழிய கட்டிடம் எதுவும் இல்லை. அந்தக் கல்லையே ஒரு மியூஸியமாக வைக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு எண்ணமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லையும் அப்படியே வைக்கலாம். ஆனால் இப்பொழுது ரூபாய் 6 லட்சத்திறகு மேலே செலவாகிறது, பணம் தேடித் தான் கட்டிடம் கட்ட வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : ரூ. 13, 14 லட்சம் செலவில் சிறுவர்களுக்கு என்று தனிக்காட்சி சாலை எழுப்புவதாக திட்டம் இருந்தது. மத்திய அரசாங்கம் தலையிட்டதால் அது கைவிடப்பட்டு ஒரு தனிப் பகுதி மட்டும் ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்லப்படுவது உண்மையா ? சிறுவர்களுக்கு என்று தனியாகவே ஒரு சாலை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது மதிப்புப் போட்டதில் ரூ. 10,62,000 ஆகிறது. இதற்கு மத்திய அரசாங்கம் உதவி பெற்று கட்டடத்தைக் கட்டவேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் உத்தேசம். மத்திய அரசாங்கத்தின் உதவியும் கோரப்பட்டிருக்கிறது.

25th March 1963]

திரு. இராம. அரங்கண்ணல் : இதற்காக ரூ. 7 லட்சத்தில் திட்டம் போட்டு உதவி கோரி டெல்லி கலாசார மந்திரியாலயத்திற்கு இந்த அரசாங்கம் எழுதியதாகவும், ஒரு ஆண்டு கழித்து அந்த மந்திரியாலயம் இது தங்களுக்கு சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல, கல்வி இலாகாவுக்கு எழுத வேண்டும் என்று நமது மாநில அரசாங்கத்திற்கு தாக்கீது அனுப்பியதாகவும், அதற்குள் போட்ட திட்டம் ரூ. 10 லட்சத்திற்கு உயர்ந்துவிட்டதாகவும், டெல்லியில் உள்ள கல்வி இலாகா அதை மறுத்து விட்ட காரணத்தினால் நம்முடைய மாநில அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற தயங்கிக்கொண்டிருக்கிறது என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தின் உதவி வேண்டும் என்பதுதான் எப்பொழுதுமே அரசாங்கத்தின் கருத்து. முன்பு இருந்த அரசாங்கம் அவ்வாறு மதிப்பீடு போட்டு, மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருந்தது. இந்தப் பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று இது தள்ளிப்போடப்பட்டது. மேலும் இதெல்லாம் விரிவாக பரிசீலனை செய்யப்பட்டு, இந்த மதிப்பீடு போடப்பட்டு, மேலும் மத்திய அரசாங்கத்தினுடைய உதவியை நாடி, அதைப் பெற்றபிறகு இதை எடுத்து நடத்தலாம் என்பது அரசாங்கத்தின் உத்தேசம்.

Prisoners (Classification)

* 374 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) on what basis prisoners are classified in Jails; and

(*b*) whether there is any proposal to abolish such classification?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Prisoners are placed in 'A' or 'B' class in jails on the basis of their character, social status, mode of living and nature of the offence committed. Class 'C' consists of prisoners who are not classified in classes 'A' or 'B'.

(*b*) There is no such proposal.

திரு. எஸ். மாதவன் : இந்த விதிகளெல்லாம் வெள்ளையர் காலத்தில் இயற்றப்பட்ட விதிகளா ? எந்த அடிப்படையிலே இந்த விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன ? பொருளாதார அடிப்படையில் இருந்தால் இதை ஜனநாயக நாட்டில் மாற்றி அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கத்தின் நிர்வாக அமைப்பே வெள்ளையர் காலத்தில் இருந்த அடிப்படையிலேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகம் நடந்துவருவதில் ஒன்றும் தவறு இல்லை. விதிகளும் வெள்ளையர் காலத்தில் இயற்றப்பட்டவைதான். ஆனால், அவ்வப்பொழுது மாற்றப்பட்டு வருகிறது. அவர்கள் எந்த வாழ்க்கையில் உள்ளவர்களோ, எத்தகைய ஒரு நிலைக்கு, அந்தஸ்துக்கு பழக்கம் உள்ளவர்களோ, அதுதான் அடிப்படை. அதற்கும் குறைக்கக் கூடாது. அப்படிக் குறைத்தால் வேண்டுமென்றே அதிகமாக தண்டனை கொடுப்பதாகும். முன்பு நடந்த சிறைச்சாலை மான்ய விவாதத்தின்போது அரசாங்கத்திற்கு தண்டிக்கும் எண்ணம், பழிக்குப் பழி வாங்கும் எண்ணம் கூடாது என்று சொன்னார்கள். அதுதான் அரசாங்கத்தின் கருத்தும். ரெபர்மேடரியாக இருக்க வேண்டுமென்பதுதான் எண்ணம். அந்த அடிப்படையிலேதான் பாகுபாடுகள் இருக்கின்றன.

திரு. எஸ். மாதவன் : அமைச்சர் அவர்கள் அந்தஸ்து என்று குறிப்பிட்டார்கள். இதைத்தான் நான் கேட்கிறேன். வெள்ளையர் காலத்தில்